Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 324

யாழ்ப்பாணம் மார்கழி 20 [illegible] 16 செவ்வாய்க்கிழமை (4-1-72)

குறைந்த செலவில்
சிறந்த சேவை



கொழும்பு ஒப்ரிக்கல்ஸ்
95, ஸ்ரான்லி ரோட் - யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகாமையில் - மேல் மாடி)
கிளை:
65, N. C. ரோட் - திருகோணமலை

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
11 JAN 1972

# ஷேக் விடுதலை: பூட்டோ அறிவிப்பு

கராச்சி, ஜனவரி 3

பங்களாதேஷ் மக்கள் குடியரசின் தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் பாகிஸ்தான் ஜனாதிபதி சுல்பிகார் அலிபூட்டோவினால் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்படுகிறார்.

இன்று மாலையில் கராச்சியில் பொதுக்கூட்ட மொன்றில் பேசுகையில் ஜனாதிபதி பூட்டோ இதை அறிவித்தார்.

உலக அபிப்பிராயத்துக்கு மதிப்பளித்து ஷேக் முஜிபுர் ரஹ்மானை நிபந்தனையின்றி விடுதலை செய்வதாக அவர் அறிவித்தார்.

ஷேக்கைத்தாம் விடுதலை செய்யப்போவதாக ஜனாப் பூட்டோ பத்திரிகை நிருபர் ஒருவருக்கு முன்பு தெரிவித்ததாக வெளிவந்த செய்தியை நேற்றுமுன்தினம் அவர் மறுத்தார். இதுபற்றி பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவிப்பதாகவும் கூறியிருந்தார். அதன்படி இன்று கராச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் ஷேக்கை விடுதலை செய்யப் போவதாக அறிவித்தார்.

ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக்கட்சி 1970-ம் ஆண்டில் நடைபெற்ற பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் கிழக்கு வங்காளத்தில் 167 தொகுதிகளில் போட்டியிட்டு 165 இடங்களை வென்றது. கிழக்குவங்காளத்துக்கு சுயநிர்ணய உரிமைகோரி அவர் போராட்டம் தொடங்கியதும் அப்போதைய ஜனாதிபதி ஜெனரல் யாஹ்யாக்கான் அவரை 1971 மார்ச் மாதம் 24-ம் திகதி கைது செய்து மேற்குப்பாகிஸ்தானில் மறைவானதோர் இடத்தில் சிறைவைத்திருந்தார். இந்திய பாகிஸ்தான் போருக்குப் பின் யாஹ்யாகான் பதவி இழந்து ஜனாப் பூட்டோ பதவிக்குவந்தபின் அவர் விடுதலை செய்யப்படுகிறார்.

சிறையிலிருந்து விடுபடும் ஷேக் தமது லட்சியக் கனவான சுதந்திர பங்களாதேசத்தை நிதர்சனமாகக் காணும் பாக்கியத்தைப் பெறவிருக்கிறார்.

# அரசியல் திட்ட நகல் பற்றி ஆராய 11 குழுக்கள் நியமனம்

## மக்கள் கருத்துக்களை பரிசீலிக்கவும் ஏற்பாடு

கொழும்பு; திங்கள்

**புதிய அரசியல் திட்ட நகல் பற்றி ஆராய்வதற்கான 11 குழுக்களை அரசியல் நிர்ணயசபை இன்று நியமித்தது.**

அரசியல் நிர்ணய சபையினால் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களின் அடிப்படையிலேயே அரசியல் திட்ட நகல் அமைந்திருப்பதாக அரசியல் திட்டவிவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கொண்டு வந்த பிரேரணையை சபை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது. சபை மீண்டும் 6ம் தேதி காலை 10 மணிக்குக் கூடும்.

அரசியல் திட்ட நகல் சம்பந்தமாக பொது மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் திருத்தப் பிரேரணை வடிவில் சமர்ப்பிக்கப்படும் பொதுமக்களின் யோசனைகள் அனைத்துமே அவைகள் சம்பந்தப்பட்ட குழுக்களின் பரிசிலனைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் டாக்டர் கொல்வின் தெரிவித்தார்.

இந்தக் குழுக்கள் யாவற்றிலும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அங்கம் வகிப்பார் என்று தெரிகிறது.

அரசியல் நிர்ணயசபையினால் நியமிக்கப்பட்டுள்ள பதினொருகுழுக்களும் அவைகளின் தலைவர்களும் பின்வருமாறு:-

1. மக்கள் அரசாங்கம், இறைமை சம்பந்தமான குழுவுக்கு திரு. பி. ஜி. பீட்டர் கெனமன் தலைமைவகிப்பார். அரசியல் சட்ட நகலின் முதல் அத்தியாயத்தை இக்குழு பரிசீலிக்கும்.

2. பௌத்தமதம் சம்பந்தமான குழுவுக்கு பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமை வகிப்பார். இரண்டாவது அத்தியாயத்தை இக்குழு பரிசீலிக்கும்.

(5-ம் பக்கம் பார்க்க

புதிய கல்விச் சீர்திருத்தம்

## அபிப்பிராயம் தெரிவிக்க ஆசிரியர்க்கு சுதந்திரம்

கோட்டை, திங்கள்

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத், கல்வி அமைச்சின் ஆட்சிமன்றச் செயலாளர் திரு. பி. வை. துடாவை, அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. உடகம ஆகியோர் நாட்டிலுள்ள பல்வேறு ஆசிரியர் சங்கங்களுக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயங்கள் வரவேற்கப் படுமெனத் தெரிவித்துள்ளனர்.

எந்த ஓர் ஆசிரியரும் கல்விச் சீர்திருத்தங்களைக் கண்டிப்பதாலோ அல்லது அபிப்பிராயம் தெரிவிப்பதாலோ வேலையிழந்தால் நான் எனது பதவியைத் துறக்க தயாராக உள்ளேன் எனத் திரு. துடாவை கல்வியமைச்சின் மீதான மான்யத்தின் மீது ஆட்சிமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

## 'கல்வித்துறையில் மாற்றங்கள் நாட்டின் பொதுநன்மைக்காவே'

### கல்வி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, திங்கள்

நாட்டின் பொது நன்மை கருதி இந்த ஆண்டில் பாடசாலைகளில் பல மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் கூறினார்.

கல்வித்துறைக்கென இந்த ஆண்டில் 13 கோடிரூபாவை கல்வி அமைச்சு செலவழிக்கவிருக்கின்றது என்றார் அமைச்சர். ஆறும் வகுப்பிலிருந்து புது விதமான பாடத்திட்டம் ஒன்று அமுலாக்கப்படும். இந்த வகுப்புமாணவர்கள் பொதுவான 10 பாடங்களைப்படிக்க வேண்டியிருக்கும் என்றார் அவர்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியதராதரப் பத்திர பரீட்சைகளுக்கு ஒரு மாணவன் எந்தப்பாடசாலையிலிருந்தும் இரண்டுதடவைகள் மாத்திரமே தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர். மேற்கல்வியைத் தொடர விரும்பாத மாணவர்கள் திட்ட அமைச்சின் யோசனைக்கு அமைய தேசிய சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

பொதுத்தராதரப் பத்திர வகுப்புக்குப் பதிலாக அமுலுக்கு வரும் தேசியதராதர வகுப்பு சோதனையில் மாணவர்களின் திறமையின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகம் போன்ற மேற்படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதிக்கப்படுவது கட்டுப்படுத்தப்படமாட்டாது மாறாக வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களில் தோற்றுவிக்கப்படவிருக்கும் புதிய பல்கலைக்கழகக் கல்லூரிகளில் தேவைக்கேற்ப மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். பல்கலைக்கழகங்களில் அதிக ஆராய்ச்சிகளுக்கு வசதியும் ஊக்கமும் அளிக்கப்படும்.

உயர்தர வகுப்புகளிலும் பல்கலைக்கழகத்திலும் ஆங்கிலத்தின் தரத்தை உயர்

(5-ம் பக்கம் பார்க்க

## உப உணவு உற்பத்திக்கு கூடிய கடன்வசதி

கோட்டை, திங்கள்

நெல், மற்றும் உப உணவுப் பொருட்கள், மரக்கறிவகைகள் ஆகியவற்றின் உற்பத்திக்குக் கடந்த ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு கூடிய கடன் வசதிகள் செய்து கொடுக்க விவசாய அமைச்சர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

குறுகியகால விவசாயக் கடன்கள் கடந்த ஆண்டிலும் பார்க்க கூடுதலாக வழங்கப்பட விருக்கின்றன. 5 கோடி ரூபாவுக்கும் மேலாகக் குறுகியகால விவசாயக் கடன்கள் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. 1971ம் ஆண்டு அக்கடன் வசதிக்கு இரண்டரைக் கோடிக்கும் சற்று அதிகமாகவே ஒதுக்கப்பட்டது.

விவசாயிகள் கஷ்டமெதுவுமின்றிக் கடனைப் பெற்று விவசாயத்தை மேற்கொள்ளத்தக்க வகையில் கடன் வழங்கும் திட்டங்களை இவ்வாண்டு விஸ்தரிக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டு வேலைகள் பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3845

### வைத்தியம்

வாதம், விரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம். (D.A.M.) தங்க பாலகரன் வைத்தியசாலை, இராச வீதி, நல்லூர் மார்க்கெட் யாழ்ப்பாணம். 3817

### வாடகைக்கு

கட்டுடைப் பாடசாலைக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் சிறந்த வீடு முழுதாகவோ பகுதியாகவோ வாடகைக்கு உண்டு. 79, கட்டுடை, மானிப்பாய். 3586

### விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தைத் தானையில் 4 1/2 பரப்புக் காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. சந்தைத் தானை ஸ்டேசன் இந்துக் கல்லூரி அருகிலிருக்கிறது. விபரம்: K. S. கந்தையா, உரும்பராய் சந்தி. 3353

### விற்பனைக்கு

ராதா குடிநீரகம், வாய்வுப்பிடிப்புகள், நரம்பு வலிகள், சளுக்குகள், தலையிடி, ஜலதோஷம் முதலிய நோய்களுக்குச் சிறந்தது எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 160, செட்டியார்தெரு, கொழும்பு. 3846

நல்ல பழக்கவழக்கமுள்ள உயர்தர அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. இவைகளிலிருந்து சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன், 15, மனோகரன் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 3811

**யாழ். தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த
**நிறைகுடம்**

**நியூ கலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி, ஞாயிறு பி.ப. 2-30
சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும்வரை**

### விற்பனைக்கு

நாவலர் வீதி ரயில்வே கடவைக்கு அருகில், பலநிலையம், பிரபல பாடசாலைகள் நவீன சந்தை ஆகியவற்றுக்குச் சமீபத்தில் நிலப்பரப்பு கமார் மூன்று பரப்புக்காணி கிணற்றுடன், உடனடியாக கையேற்கக்கூடிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. பொ. காங்கேயன், புறக்டர், பொற்பதிறோட், கொக்குவில். 3848

மங்கு உறுதியின் கீழுள்ள இரு காணிகள் நவாலி முதலியார் வளவு ஐந்துபரப்பு மானிப்பாய் வேலக்கைப், பிள்ளையார் கோயிலுக்குச் சமீபத்தில் விட்டாண்டித் தோட்டம் ஒன்றேகால் பரப்பு—விபரங்களுக்கு சிங்கநாயகம். 'கஸ்தூரி' லோட்டன் வீதி மானிப்பாய் தெற்கு என்ற விலாசத்தாருடன் 7-ந் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும். 3847

### கல்வி

கல்வி போதனு நிலையம், 34, பலாலி வீதி, யாழ்ப்பாணம். க. பொ. த. உயர்தர/சாதாரண விஞ்ஞான கலை வர்த்தக வகுப்புகள் க. பொ. த. ஆரம்ப வகுப்புகள் 3-1-72 முதல் ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் உடன் மனுச்செய்யவும். பதிவாளர். 3843

### தேவை

க. பொ. த. சாதாரண வகுப்புகளுக்கு தூயகணிதம் உயிரியல் பாடங்கள் கற்பிக்க அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவை உடன் மனுச் செய்யவும். நிர்வாகி, கல்வி போதனு நிலையம், 34, பலாலி வீதி, யாழ்ப்பாணம் 3844

# 'ஆறு ஆண்டுகளில் பிரச்சினைகள் தீரும்'

— அமைச்சர்

கேகாலை திங்கள்

புதிய அரசியல் அமைப்பு ஏற்பட்டதும் தற்போதைய அரசாங்கம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பதவியிலிருக்கும். இக்காலப்பகுதியில் இந்நாடு எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் யாவற்றையும் மக்கள் அரசாங்கம் தீர்த்துவைக்கும்.

ஹெட்டிமுல்லையில் நிறுவப்பட்ட புதிய தபால்கந்தோரைத் திறந்துவைத்துப் பேசுகையில் கப்பற்றொழில் உல்லாசப்பிரயாண அமைச்சர் திரு பி பி ஜி கலுகல மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நாட்டைப் பயங்கரவாதிகளின் ஆபத்தில் இருந்து காப்பாற்றியதற்கு மக்கள், மக்கள் அரசாங்கத்துக்கு என்றென்றும் நன்றியுடையவர்களாகவிருக்க வேண்டும்.

தியாகத்தின் மூலமே நாட்டை வளம்படுத்தலாம். தியாகம்பற்றிப் போதனை செய்பவர்களில் இருந்து ஆரம்பிக்கவேண்டும். பிரதமர் பெரும் தியாகம்செய்ய உள்ளார் தனது ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை மக்களுக்காகத் தியாகம் செய்ய முன்வந்துள்ளார். மக்கள் அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்துக்குள் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகண்டு ஜனநாயக சோஸலிசத்தை அடைந்துவிடும்.

கல்முல ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு பி பி யாபா சூரியா உட்படப் பலர் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

# 'விவசாய அபிவிருத்தி கொள்கையில் தீவிரமாற்றம்'

அம்பாந்தோட்டை, திங்கள்

5 ஆண்டு திட்டப்படி விவசாய அபிவிருத்தி கொள்கையில் அரசாங்கம் தீவிர மாற்றங்களைச் செய்யவுள்ளது. மக்கள் கமிட்டிகள் இதனைச் செயல்படுத்த உதவ வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் திரு ஜோர்ஜ் ராஜபக்ஸ கூறினார்.

அம்பாந்தோட்டை மாவட்டமக்கள் கமிட்டி அங்கத்தவர்களுக்கு கடிதங்களை வழங்கி அமைச்சர் உரை நிகழ்த்தினார்.

மக்கள் ஒழுக்கநெறி நிறுவுதன்மூலம் கட்டாரசாங்கம் மற்றொரு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது என்று அமைச்சர் கூறினார்

மக்கள் கமிட்டி ஆணையாளர் திரு லயனல் பெர்னாண்டோ பேசுகையில் லஞ்சம் ஊழல் ஆகியவற்றை ஒழித்துக்கட்டுவதற்கு மக்கள் கமிட்டிகள் உழைக்க வேண்டுமென்றும் ஊழல்களை ஒழித்து மக்களை அதிவிருத்தி பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று கூறினார்.

அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளை நிறைவேற்றும்போது பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்புகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படும் அதனை முறியடிக்க வேண்டும் என்று திரு லயனல் கூறினார்.

### பொலிசார்மீது விசாரணை

நீர்கொழும்பு, திங்கள்

பொலிஸ் சார்ஜன்டுகள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவர், உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் ஒருவர் ஆகியோரது வீடுகளைத் திடீர் சோதனையிட்ட உயர் இலாகா அதிகாரிகள் மேற்படி வீடுகளில் கடத்தல் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

நீர்கொழும்புப்பகுதியைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் இந்தப் பொலிசார் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

மீசாலை, திங்கள்

உசன் திருச்சபையில் பரிபாலகராகக் கடமையாற்றிவந்த வணக்கத்துக்குரிய ஜெயசிங்கம் முதலாம் திகதி முதல் மானிப்பாய் திருச்சபைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
**சவாலே சமாளி**

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த
**தேடிவந்த மாப்பிள்ளை**

2-வது வாரம்
**வெலிங்டன் சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-காஞ்சனு
நடித்த
**சிவந்தமண்**
(ஈஸ்ட்மன் கலர்)

**MANOHARA**
(Jaffna)
Daily 4 Shows
See the hot Spots
of the World
The Sexiest Women
from East to West
in
**SEXY**
(Colour)
(A Certificate)

**நாகம்ஸ் சினிமா**
கன்னாகம்
6-00, 10-00 சனி,
ஞாயிறு 2-30.
**இருமலர்கள்**
(புதிய கொப்பி)
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு காலை 10-30
HOW TO STEAL
THE WORLD

**REGAL (Jaffna)**
Daily 5-00, 7-15 p. m.
Sat. Sundays 10-30
Fredrick Stafford
in
MISSION FOR
A KILLER
(color film)
தினசரி 2-00, 10-00
சிவாஜி — சாவித்திரி
நடித்த
**வடிவுக்கு வளைகாப்பு**

**சாந்தி**
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
ஜெமினி—விஜயகுமாரி
நடித்த
**அவரே என் தெய்வம்**

7-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00 சனி. ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்
நடித்த

**என் அண்ணன்**

**லிடோ** (யாழ்ப்பாணம்) **லிடோ** (கொழும்பு)
தினசரி: காலை 10-00பி.ப. 3-00, மாலை 6-00 இரவு 9-30
★ சம்மிகபூர் ★ சர்மிலாதாகூர்
★ பிரான் ராஜேந்திரநாத்
★ கே. என். சிங்
நடித்த
சக்தி பிலிம்ஸ்
**அன்சுவினிங்இன் பரிஸ்**
(ஈஸ்ட்மன் கலர்)



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
(இருவேடங்களில்) - அசோகன்
மனோகர - சோ - தேங்காய் சினிவாசன்
மனோரமா
நடித்த
**நீரும் நெருப்பும்**
(ஈஸ்ட்மன் கலர்)

# "ஷேக்கை நிபந்தனையின்றி விடுவித்தால் பாரத - பாக். உறவு வெகுதூரம் பலப்படும்"

— சர்தார் சுவர்ண்சிங்

## பங்களாதேஷ் அரசை விரைவில் பல நாடுகள் அங்கீகரிக்குமாம்

புதுடில்லி, ஜன. 3

ஷேக் முஜிபுர் ரஹ்மானை நிபந்தனையின்றி பாகிஸ்தான் அரசு விடுதலை செய்ய வேண்டும். அப்படி செய்தால் பாகிஸ்தான்-இந்தியா நட்புறவு வளர்வதற்கு வெகு தூரம் உதவியாக இருக்கும் என்று இந்திய வெளிஉறவு அமைச்சர் சர்தார் சுவர்ண சிங் கூறினார்.

புதுடில்லியில் பொதுக்கூட்டமொன்றில் பேசிய சர்தார் சுவர்ண்சிங் பங்களா தேஷ் மறந்துள்ள உண்மை நிலையை அமெரிக்காவும் சீனாவும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

மேலும் பல நாடுகள் விரைவில் பங்களாதேஷ் அரசை அங்கீகரிக்க முன்வரக்கூடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். டாக்காவிலுள்ள தமது தூதராலயங்களை அநேகமாக எல்லா நாடுகளுமே இன்னமும் மூடிவிடவில்லையென்பதை அவர் சுட்டிக்காட்டினார். வர்த்தக ரீதியில் இந்த நாடுகள் முதலில் உறவு செய்த பின்னர் மாமூல் அங்கீகாரம் அளிக்க முன்வரலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் பாரத-பாகிஸ்தான் போர் சம்பந்தமான தீர்மானங்கள் கொண்டுவரப் பட்டபோது "வீட்டோ" தடை அதிகாரம் கொண்ட மூன்று நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்தன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்னையில் சோவியத் யூனியன், போலந்து, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் மேற்கொண்ட கொள்கையை அவர் பாராட்டினார். இந்த நாடுகள் உண்மைநிலையை உணர்ந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

### மத உணர்ச்சிக்கு மதிப்பு

பங்களாதேஷில் மதஉணர்ச்சிக்கு மதிப்பு அளிக்கப்படும் ஆனால் அரசாங்கம் மதசார்பற்ற கொள்கையையே பின்பற்றும். மதத்தின் பேரால் ஏமாற்றுவேலைகள் நடைபெறுவதையும் அனுமதிக்க மாட்டோம் என்று பங்களாதேஷ் பிரதம மந்திரி திரு தாஜுதீன் அகமது கூறியிருக்கிறார்.

......

### 'ஈடுகொடுக்க உழைப்போம்'

ஊரதீவு, திங்கள்

'எதிர்காலத்தில் உருவாகப்போகின்ற சுயாதிபத்தியமும், தனித்துவமும் மிக்க, பகுத்தறிவுரீதியான சமூதாயத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய முறையில் நமது இனத்தையும், சமுதாயத்தையும் உருவாக்க நாம் உழைக்க வேண்டும்'

ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தலைவரும், இலங்கைச் சட்டக்கல்லூரி மாணவருமான திரு க. மகேந்திரன், மன்றத்தில் வருடாந்தக் கூட்டத்திற்குதலைமைதாங்கி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்;

இக்கூட்டத்தில் திருவாளர்கள் க. ஸ்ரீசந்திரராசா, பொ சுந்தரமூர்த்தி, சு. இராசகுலசிங்கம். கா. கந்தசாமி ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

......

### அமெரிக்க விவசாயிகளுடன்

யாழ்ப்பாணம். செவ்.

இன்றுமாலை 4 30 மணிக்கு திருநெல்வேலி பலாலிவீதியிலுள்ள விவசாய விரிவாக்க நிலையத்தில் அமெரிக்க இளம் விவசாயிகள் இருவர்கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த இரு விவசாயிகளும் கலந்துரையாடுவார்கள். விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களும் சொற்பொழிவாற்றுவர்

## "இந்தியாவில் தேசிய வெறி கிடையாது"

### • 'பிராவ்தா' பாராட்டு

மாஸ்கோ, ஜன 3

இந்தோ-பாகிஸ்தான் மோதலுக்குப் பின்னர் இந்தியாவில் ஐக்கியமும் தேசபக்த உணர்ச்சியும் நிலவுகிறது. அதில் குறுகியதேசிய வெறி கிஞ்சித்தேனும் கிடையாது.

இவ்வாறு சோவியத்பத்திரிகையான 'பிராவ்தா'வில் பிரசுரமாகியுள்ள விமர்சனமொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்செய்தி விமர்சனம் "நாட்டின் சந்தோஷத்தையும் தேசிய நலன்களையும் பாதுகாப்பதில் இந்திய மக்கள் அதிசயிக்கத்தக்க முறையில் ஒற்றுமையாக அணிவகுத்து நின்றனர்" என்று கூறுகிறது.

பாகிஸ்தான்மீது இந்தியாவுக்கு மண்ணாசை கிடையாதென்ற அரசாங்கத்தின் நிலைமை இந்தியாவில் ஆரோக்கியமான சூழலை உருவாக்கவும் போர்வெறி தோன்றாமலிருக்கவும் உதவியாய் இருந்தது போரை வைத்துக் குறுகிய வெறியைத் தூண்டிவிடமுயன்ற வலதுசாரி சக்திகள் எடுத்த பிரயத்தனங்கள் தோல்வியுற்றன என்று அது மேலும் கூறுகிறது.

இந்தியாவின் நண்பர்கள் யார், நண்பர்கள் வேஷத்தில் உலவுபவர்கள் யார் என்பதைப் புரிந்துகொள்ள போர் ஏதுவாய் இருந்தது என்று 'பிராவ்தா' கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

இந்தோ-பாகிஸ்தான் மோதலில் அமெரிக்க அரசாங்கம் எடுத்த நிலைமை குறித்து இந்திய மக்கள் வெஞ்சின மடைந்தனர். அமெரிக்காவின் ஏழாவது கப்பற்படை வங்காள விரிகுடாவுக்குள் ஏவி விடப்பட்டபோது இது உச்சக்கட்டத்தையடைந்தது. சீன தலைமைப்பீடம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்து நின்றதையும் இந்திய மக்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

"சமாதான பூர்வமான சோவியத் நிலைமை இந்தியாவில் நல்விளப்பத்துடனும் நன்றியறிதலுடனும் வரவேற்கப்பட்டது" என்று கட்டுரை மேலும் கூறுகின்றது.

......

### 2 வருடமாக தேடப்பட்டவர் கைது

மாவிட்டபுரம், திங்கள்

இரண்டு வருடங்களாக குருநாகல் பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்துவந்த ஆசாமி ஒருவர் காங்கேசன்துறை பொலிசாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்,

கந்தசாமி சங்கரப்பிள்ளை என்னும் ஐ. ஆர். சி. ஒருவரை குருநாகல் பொலிசார் தேடிவந்தனர். 2 வருடங்களாக தலைமறைவாக திரிந்த இவர் பற்றிய தகவல் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு வி. செல்லையா நேற்று காங்கேசன் துறையில் வைத்து பிரஸ்தாப நபரை கைதுசெய்து குருநாகலுக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைத்தார்.

......

### ரயிலில் மோதுண்டவர்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புநோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலில் மோதுண்ட சின்னம்மா என்ற வயோதிபப்பெண் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கச்சாய்க்கு அண்மையில் இவ்விபத்து நிகழ்ந்தது. கோயில் குடியிருப்பைச் சேர்ந்த இந்தப்பெண் இந்த சுவாதீனமானவர் என்று கூறப்பட்டது.

(குவிம)

## ஷேக் விடுதலை செய்தி: பூட்டோ மறுக்கிறார்

ஷேக் முஜிபுர் ரஹ்மானை இன்னும் ஒருசில தினங்களில் நிபந்தனையின்றி பூட்டோ விடுதலை செய்யப் போகிறார் என்று வெளிவந்த செய்தியை ஜனாதிபதி பூட்டோ மறுத்திருக்கிறார் தாம் அப்படி எதுவும் சொல்லவில்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

ஷேக்முஜிபுர் ரஹ்மான் விஷயமாக இரண்டொரு நாட்களில் முடிவு எடுக்கப்படும். பொறுப்பளிக்காமல் பரப்பாதீர்கள். இது பற்றி நான் பொதுக்கூட்டத்தில் அறிவிப்பேன் என்று அதிபர் பூட்டோ தெரிவித்தார்.

ஷேக்முஜிபுர் ரஹ்மானை விடுதலை செய்ய வேண்டும் என்றும், ஜெனரல் யாஹ்யாகான்மீது விசாரணை நடத்த வேண்டும் என்றும் முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் அஸ்ஹர்கான் வெளியிட்ட அறிக்கையை வெளியிட வேண்டாம் என பாகிஸ்தான் அரசாங்கம் தடைவிதித்திருப்பதாக பாகிஸ்தான் உருது பத்திரிகையொன்று கண்டித்திருக்கின்றது.

இந்திய- பாகிஸ்தான் போரில் அமெரிக்கா கடைப்பிடித்த கொள்கையைக் கண்டித்த நாற்றுக்கணக்கான அமெரிக்க மக்கள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு கடிதங்கள் எழுதியுள்ளதாக அதிகாரிகள் கூறினார்கள். இவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## பிரபல பிரஞ்சு நடிகர் காலமானார்

பாரிஸ், ஜன. 3

பிரபல பிரஞ்சு நடிகர் மாரிஸ் செவேலியர் தமது 83வது வயதில் காலமானார். நாடகத்துறையிலும் சினிமாவிலும் மக்கள் மனம் கவர்ந்த நடிகராகவிருந்த இவர் தமது கடைசிக்காலத்திலும்கூட உள்ளத்தினால் இளைஞராகவே விளங்கினார்.

சிரித்துக்கொண்டே இறக்க விரும்புகிறேன் என்று அவர் ஒருமுறை கூறியிருக்கிறார்.

அவர் தமது 12-ம் வயதில் நடிக்க ஆரம்பித்தார். 20 வயதில் பாரிஸ் நகரில் பிரபல்யமான நடிகரானார். 30 வயதில் ஐரோப்பிய நாடுகளில் புகழ் பெற்றார். 40 வயதில் முதலாவது பேசும்படங்களில் நடித்து புகழ்பெற்ற கலைஞர் ஒருவரானார்.

முதிய வயதிலும்கூட அவர் புகழ்பெற்ற மேடை நடிகராக விளங்கினார்.

1968-ம் ஆண்டில் அவர் பாரிஸில் ஒரு கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு கூறினார்.

40 வயதில் ஒருவர் இளைஞராகவே இருக்க விரும்புகிறார். 60 வயதில் தாம் விரும்புகின்றவைகள் தேவையற்றவைகள் ஆகிய இரண்டுக்குமிடையில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறோம். 70 வயதில் ஒரு ஞானியாகிவிடுவது சுலபம். 75 வயதில் ஞானியாகிவிட வேண்டியது தான்.

நான் மேடையில் ஏறியதும் 80 வயது என்பதை மறந்து விடுகிறேன்.

ஆனால் சுறுசுறுப்போன 50 வயதுக்காரனைப்போல் எண்ணிக்கொள்கிறேன். எல்லாம் சரியாகப்போனால் 35 அல்லது 40 வயதுக்காரன்போல் எண்ணிக்கொள்வேன்; என்று கடைசிக்காலத்தில் அவர் கூறினார்.

வட வியட்னாம் மீது நடத்திய

## ஐந்து நாள் குண்டுவீச்சில் அதிபர் நிக்ஸன் திருப்தி

நியூயோர்க், ஜன. 3

வடவியட்னாம்மீது அமெரிக்க போர் விமானங்கள் 5 நாட்களாக நடத்தியதாக்குதல்கள் ராணுவரீதியில் மிகவும் பயனுள்ளவையாக இருந்தனவென்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் கூறினார்.

கொலம்பியாடெலிவிஷன் சேவைக்கு அளித்த பேட்டியொன்றில் இதை அவர்தெரிவித்தார்.

தென்வியட்னாமிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் மீதான தாக்குதல்களை கம்யூனிஸ்டுகள் விரிவுபடுத்தியதனாலும், அமெரிக்கவேவு விமானங்கள்மீது தாக்குதல் நடத்தியதாலும் இந்தக் குண்டுவீச்சுக்கு அவசியம் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

வடவியட்னாம்மீது அமெரிக்க குண்டுவீச்சைத்தொடர்ந்து தென்வியட்னாமை விடுவிக்கும் நடவடிக்கைகளை வடவியட்னாம் தீவிரப்படுத்த முடிவுசெய்துள்ளது

லாவோஸிலும் கம்போடியாவிலுமுள்ள கம்யூனிஸ்ட் துருப்புகளுக்கு சப்ளைகள் கொண்டுபோகப்படும் வழிகளின்மீது அமெரிக்க விமானங்கள் இப்போதுபெரும் எடுப்பில் குண்டுவீசித்தாக்க ஆரம்பித்துள்ளன;

நேற்று லாவோஸில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்தத்தேர்தலில்வடலாவோ பிரிவினர் கலந்துகொள்ளவில்லை. அதற்குபதிலாக லாவோஸ் ராணுவ நிலைகள்மீது அவர்கள் பெருமளவில் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்துஹோஸியின் பாதையை அமெரிக்க விமானங்கள் தொடர்ந்து குண்டுவீசித்தாக்கிவருகின்றன. இதுவரை 11 தடவைகள் இப்பகுதியில்அமெரிக்கவிமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளனவாம்.

## 'லொறி அடித்ததும் கேடர் என்மீது ஏறியது'

மீசாலை, திங்கள்

"சம்பவம் நடைபெற்ற தினம் ஒரு கடையில் சாப்பிட்டுவிட்டு இரவு 8 மணியளவில் கடை வாசலில் நின்றேன். லொறி ஒன்று யாழ்ப்பாணத்தைப் பார்த்தபடி நிற்பாட்டப்பட்டிருந்தது. கடைக்கு இந்த எதிரியுடன் மூன்று பேர் வந்தனர். அவர்களை எனக்கு முன் தெரியாது. இவர்கள் கலங்கப்பட்டனர். வெளியே நின்றபடி கிழக்கு நோக்கிப் பார்த்தேன். லொறிக்கு வெளிச்சமில்லை. லொறி என்னை அடித்து அதன் கேடர் என் மேல் ஏறியது. சில்லு ஏறவில்லை. நான் கீழே விழுந்து அதிர்ந்தேன். வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது. இனி நொச்சி ஆஸ்பத்திரியில் இிச்சை பெற்றேன். வலது கை எலும்பும், வலது காலும் பாதிக்கப்பட்டன. இப்போதும் வலது கை உயர்த்த இயலாது. அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தேன்." லொறி ஒன்றினால் தாக்கப்பட்ட புலோடு நீவைச் சேர்ந்த சி. தம்பிப்பிள்ளை என்பவர் மேற்கண்டவாறு சாட்சியம் கூறினார்.

பரந்தனில் ஒரு லொறி இவரையும் வேறு சிலரையும் தாக்கியதாக அதன் சாரதி மீது குற்றஞ்சாட்டி சாவகச்சேரி நீதவான் திரு. ஜே. ஜீ. ஆசீர்வாதம் முன்னிலையில் வழக்குத் தொடரப்பட்டது. மணற்காட்டைச் சேர்ந்த முருகப்பா கனாமிநாதன் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது!

பரந்தன் பெற்றோல் செட் மனேஜராகிய நான் சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்தேன். அப்போது அங்கு நின்ற ஒருவர் ஒரு லொறி ஆட்களை அடித்துவிட்டுக் கிளிநொச்சிப்பக்கம் போகிறதென்று சொன்னார். லொறியின் நம்பர் அப்போது தெரியாது. பின்னர் லொறியின் நம்பர் தெரியும். சம்பவம் நடந்த இடத்துக்குப் போனோம். எங்கள் சாரதி ஒருவரும் இந்த லொறியால் தாக்கப்பட்டு விழுந்துகிடந்தார். அவரை அங்கு நின்ற சிலருடைய உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தேன். விசாரணையின் பின் நீதவான் வழக்கை ஜனவரி 11ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

## அரசியல் திட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

3 அரசகருமமொழி, தேசிய சபை சம்பந்தமான குழுவுக்கு திரு ஜோர்ஜ் ராஜபக்ஷ தலைமை வகிப்பார். 6வது அத்தியாயத்தின் 7வது 8வது பிரிவுகளை இக்குழு பரிசீலிக்கும்.

4. மொழி விதிகள், ஜனாதிபதி சம்பந்தமான குழுவுக்கு திரு கொப்பேகடுவ தலைமை வகிப்பார்.

5 கொள்கைகள், அடிப்படை உரிமைகள் சம்பந்தமான குழுவுக்கு அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தலைவர். 5வது 6வது அத்தியாயங்கள்.

6 சட்டங்கள், சட்டமூலங்கள் சம்பந்தமான குழுவுக்கு டாக்டர் என் எம் பெரேரா தலைவர். 9, 10வது அத்தியாயங்கள்- 8ம் அத்தியாயத்தின் 9வது பிரிவு.

7 அரசியல் அமைப்பு சம்பந்தமான குழுவுக்கு திரு பீ பி சுபசிங்க தலைவர். 11 வது அத்தியாயம்.

8 நிதிசம்பந்தமான விஷயங்கள் திரு ஜே ஆர் ஜயவர்த்தன தலைவர். 12 வது அத்தியாயம்.

9 அமைச்சர் அமைப்புகள், தலைமைமன்றம் ஆகியவைசம்பந்தமான குழுவுக்கு திரு டீ பி இலங்கரத்னாதலைவர். 13வது அத்தியாயம் 91க்கும் 104க்கும் இடைப்பட்ட பிரிவுகள்.

10 அரசாங்க அதிகாரிகள் ஊழியர்கள் சம்பந்தமான குழுவுக்கு திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தலைவர். 13 வது அத்தியாயம் 105க்கும் 130க்கும் இடைப்பட்ட பிரிவுகள் 14 வது அத்தியாயம்.

11 நீதிபரிபாலனம் நீதிமன்றங்கள், நீதிமன்ற மொழி சம்பந்தமான குழுவுக்கு திரு மைத்திரிபால சேனநாயக்க தலைவர். 15-வது அத்தியாயம் 3வது அத்தியாயத்தில் 11 வது பிரிவு.

## காலமானார்

மட்டக்களப்பு திங்கள்

மட்டக்களப்பு இரண்டாவது எம் பி திரு ராஜன் செல்வநாயகத்தின் தந்தையார் திரு எஸ் ஏ செல்வநாயகம் நேற்று முன்தினம் காலமானார். பிரபலமான வர்த்தகரும், சமூகசேவகருமான காலஞ்சென்ற செல்வநாயகம் மட்டக்களப்பு நகரசபையின் தலைவராகவும் நீண்டகாலம் கடமையாற்றியுள்ளார்.

## மரணவிகிதம் அதிகரிப்பு

கோட்டை, திங்கள்

சமீபத்தில் சுகாதார திணைக்களம் நடத்திய ஆய்வொன்றிலிருந்து இலங்கையில் தாய்மார் குழந்தைகள் மரணவிகிதம் அதிகரித்து வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிறக்கும் ஒவ்வொரு 1000 சிசுக்களிலும் 50 சிசுக்கள் மரணமடைவதாகவும் இந்த ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாடு எதையும் கடைப்பிடிக்காமல் குழந்தைகளைப் பெறுவதினாலேயே இந்த மரணவிகித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு இந்த ஆய்வில் கண்டுபிடித்துள்ளது.

## 'ஆசிய நாடுகளை எதிர்நோக்கும் பெரும்பிரச்னை'

### இந்திரா

புதுடில்லி, ஜன 3

'வல்லரசுநாடுகள் எம்மை ஆதிக்கம் செலுத்தாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்' ஆசிய நாடுகளை எதிர்நோக்கும் பெரும் பிரச்னை இதுதான்" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குஜராத்தில் புஜ்ஜில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தினர் மத்தியில் பேசுகையில் கூறினார்.

"பெரிய நாடுகளும் பணக்கார நாடுகளும் ஆசிய நாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே விரும்புகின்றன. இதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இந்தப் பிரச்னையை தீர்த்துக்கொள்வது ஆசிய நாடுகளை எதிர்நோக்கும் பெரும் பிரச்னை" என்று அவர் சொன்னார்.

## கல்வித்துறை.....

1ம் பக்கத் தொடர்ச்சி

த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாணவர் மத்திய நிலையம் ஒன்றும் கொழும்பில் நிறுவப்படும் இங்கு ஓய்வு அறைகள், பொழுது போக்கு சாதனங்கள் வாசிகசாலை வசதிகள் போன்றவைக்கு ஒழுங்கு செய்யப்படும், மாணவர்கள் ஒன்று கூடுவதற்கு இது மிகச் சிறந்த இடமாக விடமிருக்கும்,

(ச)

## வயதுமுதிர்ந்த ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாளரின் வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமாக வைத்துச் சிறுகதைகள் ஆக்கப்பட வேண்டும் என்றும் இதன்மூலமே வாசகர்களின் அடிமனதில் சமூகத் தாக்கம் ஏற்படுமென்றும் குறிப்பிட்டார்.

உன்னதமான கதாபாத்திரம் சிறுகதைகளில் அமைய வேண்டும். சமூக வர்க்கப் பின்னணியில் எழும் இலக்கியங்களை ஆதரிக்க வேண்டும். யதார்த்த இலக்கியம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்த இலக்கியச் சந்திப்புக்கு தலைமை வகித்த திரு தெணியான் தொடுப்பேசியும் வெட்டிப் பேசியும் கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்த இலக்கிய கர்த்தாக்களை அடிக்கடி தட்டிப் பேசிக்கொண்டிருந்தார்.

தெணியான் கூறியதாவது- ஓர் அரசியல் திருப்பமே நாட்டில் சமூகத்தில் மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. அரசியல் கலந்த இலக்கியம் சமூக மாற்றத்தையேற்படுத்தும். அரசியல் அடிப்படையில் இலக்கியம் படைக்கப்பட வேண்டும். எனவே இலக்கியம் சமூகத்தை மாற்றியமைக்கிறதென்பது தெளிவு, தரமான தகுதியான சஞ்சிகைகள் எங்கிருந்து வந்தாலும் வரவேற்போம். தரமற்றவற்றையே எதிர்க்கின்றோம்,

திரு மெய்யரசன் பேசும் பொழுது இலக்கியம்படைப்பதால் தேசத்தில் மாற்றம் ஏற்பட்டுவிடாது. நாடகம் எல்லோர் மனதிலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும். நாடகத்திலே மனித உணர்ச்சிகளை ஆளும்தன்மை அதிகம் என்று சொல்லித் தரமற்ற திரைப்படங்களை தடுக்குமாறு குரலெழுப்பியிருர்கள், அப்படியானல் தரமான திரைப்படம் எது? என்று கேள்வி விடுத்தார்.

திரு ஸ்ரீபதி யதார்த்த இலக்கியம் என்றஒன்றில்லையென்று சான்றுடன் நிருபித்தார். செங்கை ஆழியான் இலக்கியம் பற்றித் தனது ஆய்வை நிகழ்த்தினார். இலக்கியக்குழுச் செயலாளர் திரு ஐ. நடேசன் நன்றியுரை கூறினார்.

## யாழ். நகரில் வீதியோரத்தில் பிரசவம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண நகரில் சனநாட்டமுள்ள மின்சார நிலைய வீதியில் நேற்று நண்பகலில் ஒரு பெண் வீதியோரத்தில் ஒரு குழந்தையைப் பெற்ற சம்பவம் நிகழ்ந்தது.

கருணாவதி செல்வநாயகம் என்ற இந்த இளம் பெண் மனநோயால் பீடிக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது இது முறைப் பிரசம் என்று கருதப்படுகிறது. இப்பெண் இப்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். குழந்தையைக் காணவில்லையென்று கூறப்படுகிறது.

## விசேஷ பயிற்சி பெறுவார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணப் பிராந்திய ஆய்வுகூடத்தில் நுண் கருவியாளராகக் கடமையாற்றிய திரு. ஜேம்ஸ் ஞானப்பிரகாசம் கதிரோக்கத்துறையில் விசேஷ பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் கொழும்பிலுள்ள மத்திய கதிரோக நிலையத்தில் தமது பயிற்சியைப் பெறச் செல்லும் இவர், இலங்கையெங்கிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள பன்னிருவரில் ஒரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 17 ஆயிரம் ஏக்கரில் கரும்புச்செய்கை

## சீனி உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, திங்கள்

உடவளவையில் 17 ஆயிரம் ஏக்கர் காணியில் கரும்புச்செய்கை மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் சீனிக் கூட்டுத்தாபன தலைவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டரை ஆண்டு ஆராய்ச்சியின் பின்னர் இந்த யோசனை செயலாக்குவதற்கு ஏற்றவகைச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

17 ஆயிரம் ஏக்கர் காணியில் கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்வதன் மூலம் சீனி உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்த கரும்பு பயிர்ச் செய்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் சீனி உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடையுமென்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இந்தியத் தினசரிகள் இனிப் பத்துப் பக்கங்கள்!

புதுடில்லி, ஜன. 3

இந்தியாவில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகள் இனி 10 பக்கங்களுக்குள் இருக்கவேண்டுமென இந்திய ஜனாதிபதி வி. வி. கிரி அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் செலவினங்களைக் குறைக்க எடுத்த நடவடிக்கைகளை தொடர்ந்தே இவ்வாறு கட்டுப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மகாராஜாக்கள் அனுபவித்துவந்த சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வருடம் பல லட்சம் அரசுக்கு மிஞ்சுகின்றது.

## கட்டுப்பெத்தைக்கு கூடிய மாணவர் அனுமதி

கொழும்பு, திங்கள்

கட்டுபெத்தை தொழில் நுட்பக்கல்லூரியில் கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வருடம் செப்டம்பர் மாதத்திலிருந்து கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக்கல்லூரி விஸ்தரிப்பு வேலைகள் இவ்வருடம் செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்துவிடும். ஐ. நா. அபிவிருத்திட்ட பிரிவிடம் விஸ்தரிப்புக்கான உதவியை கோரியுள்ளது.

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் பொறியியல், தொழில்நுட்ப மாணவர்கள் பயில்கின்றனர். 500 மாணவர்கள் இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1966-ம் ஆண்டு இந்த தொழில் நுட்பக்கல்லூரி நிறுவப்பட்டது.

## ஆறுவயதுப் பிள்ளைகளுக்கே பாடசாலைகளில் அனுமதி!

யாழ்ப்பாணம், வெள்ளி

பாடசாலைகளில் 6 வயது பூர்த்தியான பிள்ளைகளையே சேர்க்கலாமென்றும் இதுபற்றி தலைமையாசிரியர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் கல்விக்கந்தோர் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று பல பாடசாலைகளில் ஐந்துவயது பூர்த்தியான பிள்ளைகளையும் பெற்றோர்கள் அழைத்து வந்திருந்தனர். வயது விபரம் பற்றி தங்களுக்கு தெரியாதென்று அப் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

சில பாடசாலைகளில் தலைமை ஆசிரியர்கள் அப்பிள்ளைகளை அனுமதித்திருந்தனர் கல்விப் பகுதியிலிருந்து இதுபற்றி அறிவித்தல் கிடைக்கும்வரை அப்பிள்ளைகள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தலைமை ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

பல இடங்களில் புதிதாக பாலர் பாடசாலைகள் திறக்கப்பட்டிருக்கிறது. பாலர் பாடசாலைகள் இல்லாத இடங்களில் இவற்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் சில பொது ஸ்தாபனங்கள் ஈடுபட்டுள்ளன.

வடபகுதியில் பாலர் பாடசாலைகளில் மாதம் 5 ரூபா முதல் 10 ரூபாவரை அறவிடப்படுகிறது.

## 'பாரதம் அமைதிக்காகவே போராடியது!'

ஜம்நகர். ஜன. 3

"பாரதம் அமைதிக்காகவே போராடியது. அதையே இப்போதும் விரும்புகிறது. பெயரளவில் மட்டுமல்ல" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி குஜராத்தில் ஜம் நகர் விமான நிலையத்தில் அதிகாரிகள் முன் பேசுகையில் கூறினார்.

"பாகிஸ்தானுடன் நடந்த சண்டையில் அமைதி ஏற்படவேண்டுமென்பதற்காகவே இந்தியா போராடியது" என்று கூறிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, பாகிஸ்தானுடன் நடந்த சண்டையில் வெற்றிதேடித்தந்த வீரர்களுக்கு நன்றியும்பாராட்டும் தெரிவித்தார்.

இப்போது அமைதி ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. அபாயம் தொடர்ந்துகொண்டுதானிருக்கிறது என்றும் திருமதி இந்திரா எச்சரித்தார்.

வல்லரசுகளின் கூட்டு இல்லாமல் இந்தியா தற்காப்பு கொண்டதாகவே இருக்கவேண்டுமென்பதையே விரும்புகிறது. அப்படியே மண்டலசார்பற்ற கொள்கையைக் கடைப்பிடித்து வரும் என்றும் அவர் சொன்னார்.

14 நாட்கள் மக்கள் காட்டிய ஆதரவையும் உற்சாகத்தையும் பிரதமர் கண்டு மகிழ்ந்தார்.

